மாநகராட்சி மன்று
22-5-1993
யாழ்ப்பாணம்

# ஐ.நா. உதவியுடன் ஈழ அகதிகளை தாயகம் அனுப்ப

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 9 இதழ் 96
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22 — 05 — 1993

## இந்தியா தயக்கம்

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தமது சொந்தச் செலவில் இரு கப்பல்கள் மூலம் இலங்கைக்குக் கொண்டுசெல்ல அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பு முன்வந்த போதிலும் அதற்கான அனுமதியை இந்திய அரசு வழங்குவதற்கு தயக்கம் காட்டுவதாக மேற்படி அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து 13 பேர் விரைவில் விடுதலையாவர்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலுள்ளவைகதிகளில் இதில் மூன்று பேர் இன்னும் ஒரு மாத காலத்தினுள் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான நடவடிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிகள் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில்

(4-ம் பக்கம் பார்க்க)

# மாகாணசபைகளைப்பிடிப்பதில் அரசு-எதிர்க்கட்சிகள் மோதல்!

(கொழும்பு)

அண்மையில் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலையடுத்து அதிகளவு மாகாணசபைகளின் ஆட்சியைப் பிடித்துக் கொள்வதில் அரச தரப்பினருக்கும், எதிரணியினருக்கும் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. இருபகுதியினரும் தமது கட்சிகளை ஆட்சி பீடத்தில் ஏற்றும் விதத்தில் முதலமைச்சர்களின் நியமனங்களை மேற்கொள்வதில் அவசரம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் தனி ஒருகட்சி என்ற ரீதியில் கூடுதல் ஆசனங்களை பெற்றது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியே.

எனினும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுசன மக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இந்தப்பகுதிகளில் கூட்டாக இணையும் பட்சத்தில் ஐ. தே. கவை விட கூடுதல் ஆசனங்களைப்பெற்றுக்கொள்கிறது.

இதேவேளையில் எதிர்க்கட்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - சிறிமா அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண ஆளுநர்கள் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவைச் சந்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்புக்கு முரணானது

(கொழும்பு)

பொதுசன மக்கள் ஐக்கிய முன்னணியினரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரும் தென்மாகாண, வடமேல் மாகாண ஆளுநர்களுக்கு கடிதம் எழுதியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட மாகாணங்

(4-ம் பக்கம் பார்க்க

## தேர்தல் சட்டத்துக்கு எதிராக இல. அரசு செயல்பட்டது

### அவதானிகள் குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் காலத்தில் அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் என்று தேர்தல் கண்காணி அரசு சம்பள உயர்வுச் சலுகைகள் வழங்கியமை, தேர்தல் சட்டத்துக்கு புறம்பானது என்று இலங்கை வந்துள்ள சர்வதேச கண்காணிப்புக் குழு தமது அறிக்கையில் தெரிவித்

(2-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நிதியிலிருந்து படையினருக்கு உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் இராணுவத்தினரின் பாவனைக்கென அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான ராணுவ தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

படையினரின் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகை

(3-ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

## இலங்கை வருவதற்கு இனி விஸா பெறத் தேவையில்லை

(கொழும்பு)

வெளிநாட்டு, முதலீட்டாளர்கள் இலங்கை வருவதற்கு இனிமேல் விஸா பெறத் தேவையில்லை என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நேற்று அறிவித்தது.

இதுசம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மேற்படி திணைக்களத்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளை கண்டுபிடிக்க தனிப்பொலிஸ் பிரிவு

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் மீண்டும் தலைதூக்கிவிட்டதா என்பதை அறிவதற்கு மத்திய அரசு தனிப் பொலிஸ் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் அதிகரித்துவிட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருவதை கருத்தில் கொண்டே இந்த தனிப் பொலிஸ் பிரிவை

(3ம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக

## அனுமதிப்பத்திரங்கள் 24 திகதிமுதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமிருந்து 1992, 93 ம் கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிகள் சம்பந்தமான பதிவேடுகளும், கைநூல்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை 1991 ஆகஸ்ட், 1992 ஏப்ரல் (விசேட) இல் நடைபெற்ற க. பொ. த (உ/த) பரீட்சைகள் அனுமதிகள் கிளையினூல் எதிர்வரும் 24 ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் விநியோகிக்கப்படும்

தகுதிபெற்ற மாணவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, பரீட்சை பெறு

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக சிறைகளிலிருந்து

## புலிகள் தப்பிச் செல்ல மத்திய அரசு உடந்தையாம்

(சென்னை)

"தமிழ்நாட்டின் சிறைச்சாலைகளின் காவலில் வைக்கப்பட்டுள்ள, விடுதலைப் புலிகள் தப்பிச் செல்வதற்கு மத்திய அரசு உடந்தையாக இருக்கக் கூடும் என்று நான் சந்தேகிக்கின்றேன்" இவ்வாறு தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

## மீளக்குடியமர்வோருக்கு கடன் வழங்கும் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் மீளக்குடி அமர்த்தப்பட்டவர்களுக்கு கடன் வழங்கும் திட்டம் ஒன்றை அரசு ஆரம்பித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு இந்தக்கடன் வழங்கப்படவுள்ளது.

விவசாயம், கடற்தொழில், பால் பண்ணை போன்ற

(4-ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைப் பிரதிநிதி ராணுவ பகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளையின் பிரதிநிதி தீவுப்பகுதி பலாலி மாதகல் பகுதிகளுக்கு விஜயம் செய்து திரும்பியுள்ளார்

இவரது விஜயத்தின் போது இவர் இராணுவத்தின்பிடியில் சிக்கியுள்ள பொதுமக்களை கைதிகளையும் சந்தித்து உரையாற்றியுள்ளார்.

இதேவேளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் புதிய பிரதிநிதி பீட்கைவைஸர் நாளை மறுதினம்

(-4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மலை வேப்பம் விதை

மலை வேப்பம் விதை நாற்று மேடைப் பயன்பாட்டுக்குத் தேவை. தொடர்பு:- மிக்க்வைற். (ஏ 3151)

### பாலாஜி புத்தகசாலை

ரமணிச்சந்திரன் நாவல்கள், கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' (10 பாகம், பிறந்தநாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3148)

### மில் விற்பனைக்கு

இரண்டு Wilco இரைண்டர், சோமசிறி No 7 ஆகியன விற்பனைக்குண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: யாழ். ரெக்ஸ், பிரசாத் வீதி, (வட்டு) இந்துக் கல்லூரிக்கு அருகில் வட்டு கிழக்கு, சித்தன்கேணி. (சி-126)

### நீமியா பசளை, பூச்சி கொல்லி

சிறந்த விளைச்சலுக்கு நீமியா-பயிர் பாதுகாப்பு பூச்சி கொல்லியாக நீரில் கலந்து விசிற நீமியா-கிலோ பக்கற் விலை ரூபா. 18/- மொத்தக் கொள்வனவுக்குக் கழிவுண்டு அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மிக்க்வைற்" (ஏ-3145)

### எயர் லங்கா பணிப்பாளர் சபை

(கொழும்பு)

ஜெனரல் சேபால ஆட்டிகல தலைமையில் எயர் லங்காவின் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது.

திறைசேரிச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், பிரதமரின் செயலாளர் கே. எம். திப்பகிங்க இலங்கை வங்கிப் பொது முகாமையாளர் திரு. மதி ஆர் எல் நாணயக்கார ஆகியோரும் பணிப்பாளர் சபையில் இருப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### கோஷ்டி மோதலில் நால்வர் காயம்

(நெல்லியடி)

பழைய பகைமை காரணமாக ஏற்பட்ட கோஷ்டி மோதலில் கம்பிகள், கற்கள் போத்தல் ஓடுகளினால் தாக்குதலுக்குள்ளாகிய ஒரு பெண்மணி உட்பட நால்வர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் துன்னாலை கலிகைச்சந்தி வேம்படி என்னும் இடத்தில் நடைபெற்றது.

பலத்த காயங்களுக்காளாகிய திருமதி தம்பித்துரை சுந்தரி (வயது 46) செல்வராஜா சிவகுமார் (வயது 16) கணபதி பரமேஸ்வரன் (வயது 22) ஐயன் சிவபாதம் (வயது 60) ஆகியோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (160)

### இன்று குமண புறப்படுகிறது

(புலோலி)

குமண கப்பல் பொருட்களை இறக்கியதைத் தொடர்ந்து ஒரு தொகுதி அரச ஊழியர்களை ஏற்றிக்கொண்டு இன்று திருகோணமலைக்குப் புறப்பட்டுச் செல்கிறது.

கொழும்பில் சிகிச்சை பெற்ற நோயாளர்களை திருகோணமலையில் வைத்து நாளை ஏற்றிக்கொண்டு நாளை மறுதினம் திங்கள் காலை மீண்டும் இக்கப்பல் பருத்தித்துறையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (61-160)

## அரசாங்க அறிவித்தல்

சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

### மார்பு நோய் சிகிச்சை நிலையம்

# இடமாற்றம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, 51ம் இலக்க கட்டிடத்தில் அமைந்திருந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் இலக்கம் 16, மணிக்கூட்டு வீதி என்ற முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

வைத்தியகலாநிதி
பொ. இரத்தினசபாபதி,

பிராந்திய பணிப்பாளர்,
20-05-93. (எ-3146)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

உடுவில் பிரிவு

# மாபெரும் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும்

இடம்: யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
காலம்: வைகாசி 1993 21ம், 22ம் நாட்கள்


இந் நிகழ்ச்சியில் செஞ்சிலுவை செயற்பாடுகள், முதலுதவி, உள்ளூர் உற்பத்திகள், ஓவியங்கள், தொழில்நுட்பப் பொருட்கள், புகைப்படங்கள், விஞ்ஞான சம்பந்தமான படைப்புக்கள், பலதுறை அறிவு சார்ந்த ஆக்கங்கள் யாவும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இத்துடன் இசை, கலை வீடியோ படங்கள், நாடகங்கள், பொம்மலாட்டம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

குறிப்பு: 21ம் திகதி மட்டும் 11-00 மணி தொடக்கம் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது,

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
உடுவில் பிரிவு

15-5-93. (எ-3149)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் செல்வரட்ணம் ஜிந்துஜன்

திரு. திருமதி செல்வரட்ணம் - ஜெயமலர் தம்பதிகளின் புதல்வன் ஜிந்துஜன் தனது முதலாவது பிறந்தநாளை (இன்று) 22-5-93இல் மிகச்சிறப்பாக முள்ளியவளையில் தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா சரசாலையிலுள்ள அம்மம்மா, தாத்தா, சித்திமார்-சித்தப்பாமார், ஜனகன் அண்ணா, France இல் உள்ள மாமா, உற்றார், உறவினர்கள் அனைவரும் கண்ணனின் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

க. பூமணி
(அம்மம்மா)

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (இ- 128)

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை வலிகாமம், தீவகம், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 11 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை வடஇந்து மகளிர் கல்லூரியிலும், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாலை 3 மணி முதல் 4 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும். (சு-சி

## இராசி பலன்

22-05-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 09)

பிரதமை மு- இ. 8-15 வரை; ரோகினி பி இ. 2-51 வரை; அமிர்த சித்தயோகம். இராகுகாலம் காலை 8-57 முதல் 10-52 வரை; சுபநேரம் பகல் 2-57 முதல் 4-21 வரை.

மேடம்- பொருள் நஷ்டம், வீண் வம்புகள், பெரியோர் ஆசி.

இடபம்- குடும்ப மகிழ்ச்சி, காரிய சித்தி, தொழில் சிறப்பு.

மிதுனம்- நோய் கவலை, பிறர் பகைப்பு, அந்நியபடுதல்.

கடகம்- இனசன வருகை, கடித உறவு, சகோதர பாசம்.

சிங்கம்- புத்திரர் சந்தோசம், புதிய முயற்சி, புகழாரம்.

கன்னி- வார்த்தைப் போர், காரியதடை, மனச்சஞ்சலம்.

துலாம்- அசௌக்கியம், கண்ணில் ரோகம், கற்பனைப் பயம்.

விருச்சிகம்- சுபச் செய்தி, மனைமாற்றம், பயண செலவு.

தனுசு- மனதுக்குதாபம், பணலாபம், வேலைபாட்கள் உதவி.

மகரம்- நடை வார்த்தை, பிறர் உதவியை நாடல், கண்டனம்.

கும்பம்- வீண் சிரமம், மனக்கம் தகாத முயற்சி.

மீனம்- முயற்சி வெற்றி கலந்துரையாடல், லாபச் செயல்.

— ஜோதிடர்

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறவுள்ளது ஆய்வரங்கில் 'திருமண வாழ்க்கைக்கு செவ்வாய் (4-ம் பக்கம் பார்க்க)

### தேர்தல் சட்டத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

இக்குழு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள், எதிர்க்கட்சிகளின் பிரச்சாரங்களுக்கு உரிய இடம் அளிக்கவில்லை.

இதேநேரம் தேர்தல் சட்டத்துக்கு புறம்பான கட்சிச் சின்னங்களையும் கட்சிக்கொடிகளையும் தாம் கண்டதாக இக்குழு தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (சி)

## குருநகர் சந்தை

# மாட்டிறைச்சிக்கடை இல.4

மேற்படி கடைக்கு யாழ். மாநகர சபை ஆணையாளரால் மீளக்கேள்வி கோரப்பட்டுள்ளது. இது தொடர்பான கேள்வி அறிவித்தல் அலுவலக விளம்பரப்பலகையில் இடப்பட்டுள்ள மேலதிக விபரங்களை யாழ். மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

1993-05-20.

(எ- 3147)

## அந்தியேட்டி அழைப்பு

அமரர்

### கிருஷ்ணர் வேலாயுதம்பிள்ளை



ஆதி:
23-08-1919

அந்தம்:
23-04-1993

எமது இல்லத்தில் இன்று (22-05-93) சனிக்கிழமை காலை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி, ஆத்ம சாந்திக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

கிருஷ்ணர்சேய் வேலா யுதம்சித்தன் கேணிப் பெருந்தக்கான் பீடரும் நோன்பாக-உருப்பட்டான் ஆண்டு ஸ்ரீமுக ஆர்சித் திரைப்பூர்வம் பூண்டபிரத மைவான் புகுந்து.

'கற்பகம்',
டச்சு வீதி,
சித்தன்கேணி.
(சி131)

மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# இரு எம்.பிக்களை வெளியேற்ற சுதந்திரக் கட்சியினர் முடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திரு. திலக் கருணாரத்ன, டாக்டர் நெவில் பெர்ணாண்டோ ஆகிய இருவரும் விலக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஏற்கனவே அடிக்கடி விமர்சித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக இவ்விருவரும் கட்சி விரோத நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததுடன், கட்சித் தலைமைப்பீடத்தையும் கடுமையாக விமர்சித்து வந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திரு திலக் கருணாரத்ன, 'ஹெல உறுமய'வின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-சி)

## பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் ராஜினாமா

கொழும்பு

பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் எம். தம்பகிவேகா நேற்றுமுன்தினம் தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பதவியேற்றதன் பின்பு பல கூட்டுத்தாபன, திணைக்களத்தலைவர்கள் ராஜினாமாச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது (சு-சி)

## இலங்கை தமிழர் விபரம் வீடு வீடாக சேகரிப்பு

(சென்னை)

சென்னையில் தற்போது தங்கியுள்ள இலங்கை தமிழர்களின் விபரங்கள், வீடு வீடாகச் சென்று சேகரிக்கப் படுகின்றது.

தற்போது சென்னையில் வசிக்கும் சுமார் 4,600 இலங்கைத் தமிழர்களில் சிலர், தமது புதிய முகவரிகளைப் பதிவு செய்யாது இருக்கின்றனர் என்றும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சு-சி)

## ஜனாதிபதி கொலை பற்றி கருத்து கூற மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை பற்றி விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அதுபற்றி தற்போது எதுவும் கூறமுடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ஹரோல்ட் ஹேரத் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் நிருபர்கள் திரு. பிரேமா கொலை பற்றி பல கேள்விகள் தொடுத்தபோதே அமைச்சர் அங்கு அது பற்றி எதையும் கூற மறுத்துவிட்டார். (சே)

## மாகாணசபைத் தேர்தலில் 18 தமிழர்கள் தெரிவு

(கண்டி)

மாகாணசபைத் தேர்தலில் மலையகத்திலிருந்து 18 தமிழர்கள் தெரிவாகியுள்ளனர்.

மத்திய மாகாணசபை, நுவரெலியா மாவட்டம் 10 பேர், கண்டி மாவட்டம் 3 பேர், மாத்தளை மாவட்டம் ஒருவர், அத்துடன் ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் 4பேருமாக மலையகத்தில் இம்முறை 18 தமிழர்கள் தெரிவாகியுள்ளனர்

கலைக்கப்பட்ட முன்னைய மாகாண சபையில் மத்திய மாகாணத்தில் 8 தமிழர்களும், ஊவா மாகாணத்தில் 3 பேரும், சப்பிரகமுவ மாகாணத்தில் 2 பேருமாக 13 தமிழர்களே உறுப்பினராக இருந்தனர். (சே)

## இராணுவ தளபதி 'சிசில்' கூட்டுப்படை தளபதியாகிறார்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன இம்மாத இறுதிக்குள் ஓய்வு பெறுகின்றார். இவர் அநேகமாக கூட்டுப் படைத் தளபதியாக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

கூட்டுப்படைத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்படஇருக்கிறார். பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளராக இருக்கும் ஏயர்வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்ணாண்டோ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் இரண்டாம் மூன்றும் இடங்களில் இருக்கும் மேஜர் ஜெனரல் கலான திலக் பரணகம, டி. ஜே. அபேரட்ண ஆகிய இருவரும் ஓய்வுபெற இருக்கின்றனர். (சு-சி)

## ஜே. ஆர்., பிரேமா ஆட்சியில் நிர்வாகம்பலவீனமடைந்தது

(லண்டன்)

இலங்கையில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா ஆகியோரின் பத்தாண்டு கால ஆட்சியில் நாட்டின் நிர்வாகமுறை மிகவும் பலவீனமடைந்தது இவ்வாறு பி.பி.ஸி. தெரிவித்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையால் நாட்டின் நிர்வாக இயந்திரங்கள் பல வீனமடைந்தன. கொலைகளும் வன்முறைகளும் தலைதூக்கின.

ஜே. வி. பி. இயக்கத்தின் நடவடிக்கைகள் நாட்டின் தென்பகுதியில் உச்சக்கட்டத்தில் இருந்தபோது பிரேமதாசா ஆட்சியில் 20,000 இளம் சிங்களவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

ஜே வி பி இயக்கத்தை அடக்குவது என்ற பெயரில் இந்தக் கொலைகள்மேற்கொள்ளப்பட்டன என பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (இ)

## இன்று

(எழுதுமட்டுவாள்

பளை கொற்றணிப் பாடசாலைகளை சேர்ந்த ஆசிரியர்களுக்கு நாடகக் களப்பயிற்சி யாழ் பல்கலைக்கழக நுண்கலை பீடத்தினரால் 21-ம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு பளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (170)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கி வரும் 'சுகவாழ்வு' பொது விரிவுரைத் தொடரின் 8 வது அமர்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள இந்த அமர்வில் 'உயர் இரத்த அழுத்த நோயும், இருதய நோயும்' என்ற பொருளில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தனும் 'விபத்துகளும் விளைவுகளும்' என்ற பொருளில் வைத்திய கலாநிதி எஸ் சுதாகரனும் விரிவுரை வழங்கவுள்ளார்கள். (159)

★

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட ரீதியான மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில்கோட்டக்கல்வி பிரதமக்கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்தபத்து கொத்தணிகளிலும் முதலாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட போட்டியாளர்கள் கோட்ட மட்டத்தில் நடைபெறும் மேற்படிபோட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (139)

★

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிராந்திய சபைத் தலைவர் செ. கந்தசாமி தலைமையில் இன்று சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு யாழ். புனித பரியோவான் கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்விப் பயிற்சியளிப்புத் திட்டம் பிராந்திய மட்டத்தில் நடைபெறும் (154)

★

(யாழ்ப்பாணம்)

செல்வி மாணிலா எழுதிய காலக்குயில் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமைதாங்குகிறார். (159)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மகாபொல கொடுப்பனவு

5-ம் தவணைப் பணம்

பல்கலைக்கழக 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மருத்துவ, கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான 5ஆம் தவணைப்பண மகாபொல கொடுப்பனவுகளை 20-05-93 முதல் வழங்க நிதிக்கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவு பற்றிய முழு விபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்மைமைவாகக் கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.

(எ-3150)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு - 1992

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பின் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரீகம், தமிழ், அரசறிவியல், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரீகம், வரலாறு மெய்யியல், மொழியியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும்.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்ப படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 24 - 05 - 1993 லிருந்து 05 - 06 - 1993ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப்படிவங்களை பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 08/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12-06-1993க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 12-06-1993க்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்

யாழ்ப்பாண பல்கலைக் கழகம்.

21- 05-1993.

(எ-3152)


## ஹேமா எரிந்து விழுந்தார்

(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் கையளிக்கப்பட்ட பின்னர் அங்கு விஜயம்செய்த திருமதி ஹேமா பிரேமதாசா ஜனாதிபதி மாளிகையில் கடமையாற்றும் ஊழியர்களிடம் எரிந்துவிழுந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

**பாதுகாப்பு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து இப்பொருட்கள் வழங்கப்பட்டன.

20 இரண்டு சக்கர உழவியந்திரங்கள், இழுவைப்பெட்டிகள், 50 மோட்டார் சைக்கிள்கள் ஆகியனவும் இதில் அடங்கும்.

இவ் உதவிகளைக் கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது. (நி)

**புலிகளை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசு நியமித்துள்ளதாகவும், இவர்கள் தமது விசாரணைகளை மிகவேகமாக முடுக்கி விட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)


UNIVERSITY OF JAFFNA SHRI LANKA

MASTER OF PHILOSOPHY QUALIFYING EXAMINATION 1992

FACULTY OF ARTS

Applications are invited from Pass Degree Candidates for the above examination in the following subjects.

Eccomics, Geogrphy, Hindu Civilization, Tamil Sanskrit Political Science. Christian Civilization, History. Philosophy, Linguistics, Fine Arts and Drama & Theatre Arts

Application forms could be obtained from the Office of the Dean. Faculty of Arts in person or by post from 24 th, May upto 5th June 1993.

Those who wish to obtain the forms in person are required to produce a receipt from the Shroff Finance Branch of the University of Jaffna for payment of Rs 10/- Those who wish to obtain the forms by post are required to send a Money order/Postal order drawn in favour of Bursary, University of Jaffna together with a Self-addressed envelope affixing stamp to the value of Rs 8/-

Completed apllication forms should be submitted to the Office of the Dean, Faculty of Arts on or before June 12th, 1993

Applications received after this date will not be accepted.

— REGISTRAR University of Jaffna, 21-05-1993. (A3153)

## ★ மனிதப் படுகொலைகளை நிறுத்தி

# இனப்பிரச்னைக்கு உடனடியாக அமைதித்தீர்வுகாணவேண்டும்

### நியூயோர்க்கிலுள்ள இலங்கையர் கோரிக்கை

(நியூயோர்க்)

இலங்கையில் தொடர்ந்து நடைபெறும் மனிதப் படுகொலைகளை நிறுத்தி இனப்பிரச்னைக்கு அமைதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சகல அரசியல்வாதிகளும், மதத்தலைவர்களும், படையினரும் மற்றும் அனைவரும் பாடுபடவேண்டும்'' இவ்வாறு அமெரிக்க தலைநகர் நியூயோர்க்கிலிருந்து 25க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கையெழுத்திட்டு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் சமாதானம் நிலைசெய்வதற்கு உலகம் முழுவதிலுமுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச சமாதான அமைப்பு, அமெரிக்க நண்பர்கள் அமைப்பு, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரின் சமாதான அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகளின் உதவியையும் இவர்கள் நாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சகல அரசியல்வாதிகளும் இலங்கையில் விரைவில் சமாதானம் ஏற்பட புதிய ஜனாதிபதிக்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். மதத்தலைவர்கள் நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்பட மக்களைத் தூண்டும் வகையில் வழிபாடுகளை நடத்தவேண்டும், படையினர் அனைத்துப் பொதுமக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். (ரி)

---

பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேறுகள், பெற்ற புள்ளிகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்து பத்திரங்களைப் பெற்று, அவற்றைப் பூர்த்தி செய்து 1993-06-10-ம் திகதிக்குமுன் யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் திரும்ப ஒப்படைக்கவேண்டும் என யாழ். பல்கலைக்கழகம் கேட்டுள்ளது.

க. பொ. த (உ/த) பரீட்சையில் ஒரே முறையில் குறைந்தது அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25 வீத புள்ளிகளுக்குக் குறையாமலும், மொத்தப்புள்ளிகள் 180க்குக் குறையாமலும் பெற்ற மாணவர்களே இப்பத்திரங்களைப் பெறத் தகுதியுடையவர்களாவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அவ்ரோ நோட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி, யாழ் நகரப் பகுதிகளில் நேற்றுக்காலை பகல் 11.00 மணியளவில் அவ்ரோ விமானம் பலதடவைகள் சுற்றி வட்டமிட்டு நோட்டமிட்டது.

இதேவேளை கடந்தசில நாட்களாக யாழ் குடாவின் வான் பரப்பில் ஹெலிகொப்டர்களும் பலதடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (170 59 ரி)

---

பலாலியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து கைதுசெய்யப்பட்டவர்களே விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரியவருகிறது. (159-ரி)

---

சோதிட

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தோஷம் பாதிப்புண்டா?' என்ற தலைப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். சோதிடர் கே. கி இராமநாதன் ஆய்வரங்கை நெறிப்படுத்துவார். (எஸ்)

---

செஞ்சிலுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை முதல் தனது பதவியை ஏற்கவுள்ளார். இவர் ஏற்கனவே பொஸ்னியா கம்போடியா தென்னாபிரிக்கா வியட்நாம் போன்ற நாடுகளில் கடமையாற்றியவர். (159-ரி)

---

மீளக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்களில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் ஆகக்கூடியதாக 6 லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்தி வங்கி இலங்கைவங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகிய வங்கிகளின் ஊடாக இக்கடன் வழங்கப்படவுள்ளது. (வி-ரி)

---

வெளிநாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வர்த்தகர்களும் தமது நிலைப்பாட்டை உறுதி செய்தால் அவர்கள் இலங்கைக்கு வருவதற்கு விசா பெறத்தேவையில்லை என்றும் இவர்கள் இலங்கையில் மூன்று மாதகாலத்துக்கு தங்கியிருக்கலாம் என்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. (வி-ரி)

---

தமிழக சிறையி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று பத்திரிகையாளரிடம் கூறினார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த அளவில் மாநில அரசுக்கு கவலை ஏதும் இல்லை தமிழ் நாட்டிலை விட்டது என்ற கூற்றுமிகைத்தவறானது.

தமிழ்நாட்டு சிறைச்சாலைகளிலிருந்து விடுதலைப் புலிகள் தப்பிச் செல்வதற்கு மத்திய அரசு உடந்தையாக இருந்து வருகின்றது என்று நான் சந்தேகிக்கின்றேன். ஆனால் இதுபற்றி தற்போது திட்டவட்டமாக எதையும் கூற விரும்பவில்லை, என்றும் செல்வி ஜெயலலிதா பத்திரிகையாளரிடம் மேலும் கூறினார். (வி-ரி)

---

சட்டவிரோத குடியேற்றம்

## பிரான்ஸில் புதிய சட்டம் கண்ட இடத்தில் சோதனை

(பாரிஸ்)

பிரான்ஸில் சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்கும் விதத்திலும் குற்றங்களை தடுக்கும் விதத்திலும் கண்ட இடத்திலெவரையும் சோதனையிட்டு ஆள் அடையாள அட்டையை பரிசோதிக்க சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொலிசார், வேண்டிய போது கண்ட இடத்தில் எவரையும் அடையாள அட்டையை சோதனையிடக் கூடியதாகவும், சட்டவிரோதமாக பிரான்சுக்கு வருவோரை சட்டத்தின் கீழ் கொண்டுவரவும் இவ்விதி வழிவகுக்கிறது.

கண்ட இடத்தில் கண்ட கண்ட வேளையில் பொலிசார் அடையாள அட்டையையோ பாஸ்போட்டையோ பரிசோதனையிடக் கூடிய அளவில் இதுகாலவரை சட்டம் இடம் கொடுக்கவில்லை.

இப்போது கொண்டுவரப்பட்ட முடிவின்படி பொலிசார் சந்தேகிக்கும் போது எவரையும் எங்கேயும் பரிசோதிக்க முடியும்.

நாட்டுக்குள் சட்டவிரோதமாக குடிபெயர்ந்தவர்களை கண்டுபிடித்து வெளியேற்ற இது இலேசாக வகைசெய்யுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. கே-சி)

---

## பிரேமாவுக்கு வழங்கப்பட்ட 20 கார்களுக்கு என்ன நடந்தது?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பாவனைக்கென வழங்கப்பட்டிருந்த 20 கார்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இந்த கார்கள் பொலிஸ் நிலையத்திற்கு சொந்தமான வாகனங்கள் என்று கூறப்படுகிறது.

இந்தக் கார்கள் இதுவரை பிரேமதாசாவின் உறவினர்களால் திருப்பிக்கொடுக்கப்படவில்லையாம்

பொலிஸ் திணைக்களம் இந்த வாகனங்கள் குறித்து அரசுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் இப்போது விழித்துக்கொண்டிருக்கிறதாம். (இ)

---

## பொலிஸ் உத்தியோகத்தர் எம்.பி.யின் வீட்டில் தஞ்சம்

(கொழும்பு)

கிருலப்பனை பொலிஸ் நிலையத்திலிருந்து களுத்துறைக்கும் அங்கிருந்து கம்பஹாவுக்கும் மாற்றப்பட்ட பொலிஸ் புலனாய்வு உத்தியோகஸ்தர் பிரேமலால்ரணகல இப்போது தமது உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக நாடாளுமன்றஉறுப்பினர்ஒருவரின்வீட்டில்ஒளிந்துகொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

லலித் அத்துலத்முதலி கொலையை அடுத்து இந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் திடீரென களுத்துறை பொலிஸ் நிலையத்துக்குமாற்றப்பட்டு பின் அங்கிருந்து கம்பஹாவுக்கு மாற்றப்பட்டார்.

இப்போது அவர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரின் வீட்டில் தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஒளிந்திருப்பதாக கூறப்படுகிறது. (இ)

---

ஐ நா. உதவியுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளில் 7 ஆயிரம் பேரை இலங்கைக்கு மீண்டும் கொண்டு செல்வதற்காக அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பு அனுமதி கோரி இந்திய மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருந்தது.

தமது கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசு இன்னும் அனுமதி வழங்காது உதாசீனம் செய்துவருவதாக மேற்படி ஐ.நா. அமைப்பின் புதுடில்லி அதிகாரி திரு. சம்சுல்பாரி மிகவேதனையுடன் தெரிவித்துள்ளார். (வி-ரி)

---

மாகாணசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்தலைவி திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்க நேற்று ஜனாதிபதி டி. பி.விஜேதுங்காவை சந்தித்து மாகாணங்களின் ஆட்சி அமைப்பு பற்றி பேசியதாகவும் தெரிய வருகிறது.

ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் புறம்பான முறையில் அரசு மாகாணங்களில் ஆட்சியைப்பிடி முயல்வதாக அவர் ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுவந்தார்.

ஏழு மாகாண சபைகளில் தனி ஒருகட்சி பெரும்பான்மை என்ற ரீதியில் ஐ. தே. கவின் ஆறு மாகாணங்களில் ஓங்கியே உள்ளது.

ஒரே ஒரு மாகாணத்தில் மாத்திரமே பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலம் ஓங்கியிருக்கிறது.

எதிரணி கட்சிகள் ஒன்றாகக் கூட்டு சேரும் பட்சத்தில் ஏழு மாகாணங்களில் 3 மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை எதிரணி பிடித்துக் கொள்ள முடியும். (இவி-ரி)

---

ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தித்து பேசியதாக தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர்களை நியமிக்கும்போது சட்டத்தைக் கடைப்பிடிக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கும் பணிப்புரை வழங்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் இந்த நடடிக்கை முற்றுமுழுதாக ஆளுநர்களின் பொறுப்பாகும் என திரு. விஜயதுங்கா திருமதி பண்டாரநாயக்காவிடம் தெரிவித்தாராம். (இ)

---

அரசியலமைப்புக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் கூட்டாட்சி அமைக்கத் தேவையான ஆசனங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அதனால் ஆட்சி அமைக்க அனுமதி தருமாறும் மேற்படி இரண்டுகட்சிகளும் தமது கடிதத்தில் கேட்டிருந்தன.

இந்த கடிதத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட ஆளுநர்கள் ஐக்கியதேசியக் கட்சியை சேர்ந்தவர்களை முதலமைச்சர்களாக நியமித்திருப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானதென கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியலமைப்பு விவகாரம் தொடர்பான விரிவுரையாளர் ஒருவர் எதிர்ப்பை தெரிவித்துள்ளார். (இ)

---

மேல் மாகாண சபை

## முதலமைச்சராக சந்திரிகா சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

மேல்மாகாண சபையின் முதலமைச்சராக பொதுசன ஐக்கியமுன்னணியைச்சேர்ந்த திருமதி சந்திரிகா குமாரணதுங்க நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளையில் தென்மாகாண முதலமைச்சராக திரு. எம். எஸ் அமரசிறியும், வடமேல்மாகாண முதலமைச்சராக காமினி ஜெயவிக்கிரம பெரேராவும் அந்தந்த மாகாண சபை ஆளுநர்களால் அறிவிக்கப்பட்டனர். (இ)

---

## 840 மெ. தொ. அரிசியுடன் மெரினு கப்பல் வந்தது

(நெல்லியடி)

காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட மெரினுக் கப்பல் நேற்றுக்காலை பருத்துறையை வந்தடைந்தது.

840 மெற்றிக்தொன் மா, 80 மெ தொன் எம். ஓ. பீ. அடிக்கட்டுப்பசளை ஆகியவை கொண்டுவரப்பட்டன.

கடந்த வருடம் இந்த உரம் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு காங்கேசன்துறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தவையென கெயர் ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (160-61)

---

## கிடங்கில் தவறி வீழ்ந்து மண்ணுக்குள் புதைந்தவர் உயிருடன் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணைத் தோண்டும்போது கிடங்கினுள் வீழ்ந்து மண்ணால் மூடப்பட்ட ஒருவர் 45 நிமிடங்களின் பின் உயிருடன் மீட்கப்பட்டார். இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ். பெற்றோலிய கூட்டுத்தாபன வளவில் இடம்பெற்றது

அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து இங்குள்ள அகதி முகாமில் வசித்து வரும் நாற்பத்தைந்து வயதான ஜெயரத்தினம் என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மூடப்பட்டு மீட்கப்பட்டவராவார்.

இவர் குடிசை அமைப்பதற்காக மண்ணைத்தோண்டிக் கொண்டிருந்தபோது மண் இடிந்து வீழ்ந்து மண்ணால் மூடப்பட்டார் இவருக்கு மேல்பாரிய கல் ஒன்றும் வீழ்ந்தது

இவருக்கு அருகில் நின்ற குழந்தை சத்தமிடவே பொதுமக்கள் ஓடிவந்து கல்லை அப்புறப்படுத்தி மண்ணை அகற்றி இவரை மீட்டெடுத்தனர். சுமார் 45 நிமிடங்களின் பின்னர் இவர் மூர்ச்சையான நிலையில் மீட்டெடுக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (கே-159)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Sri Lanka under licence Number B/10536/B